# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 23.01.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அஸ்ஸுமரின் 33 முதல் 38 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

*பொருள் : அல்லாஹ்வின் மீது பொய்யுரைப்பவனையும், உண்மை தன்னிடம் வந்தபோது அதனைப் பொய்யாக்கியவனையும் விட மிக்க அநீதியிழைப்பவன் எவன்? நிராகரிப்பவனின் இருப்பிடம் நரகத்தில் அல்லவா இருக்கிறது?*

*ஆனால், உண்மையைக் கொண்டு வந்த(ஒவ்வொரு)வரும் அதனை மெய்ப்பித்த (ஒவ்வொரு)வரும் ஆகிய இவர்களே இறையச்சம் உடையவர்களாவர்.*

*அவர்கள் விரும்புவதெல்லாம் அவர்களது இறைவனிடம் அவர்களுக்கு உண்டு. அது நன்மை செய்பவர்களுக்குரிய கூலியாகும்.*

*அல்லாஹ், அவர்கள் செய்தவற்றின் தீமையை (தீய விளைவுகளை) அவர்களை விட்டு அகற்றி, அவர்களது வெகுமதியை அவர்களின் செயல்களுள் மிகச் சிறந்தவற்றிற்கேற்ப அவன் அவர்களுக்கு வழங்குவதற்காக(வே இது).*

*அல்லாஹ் தன் அடியானுக்குப் போதுமானவன் அல்லவா? அவன் அல்லாதவர்களைக் கொண்டு அவர்கள் உம்மைப் பயமுறுத்துகின்றனர். அல்லாஹ்வால் வழிகேட்டில் விடப்பட்டவனுக்கு வழிகாட்டுபவன் எவனுமில்லை.*

*மேலும் அல்லாஹ் ஒருவனுக்கு நேர்வழி காட்டினால் அவனைத் தவறான வழியில் நடத்துபவர் எவரும் இல்லை. அல்லாஹ் பழி வாங்குவதில் வல்லமை மிகுந்தவன் அல்லவா? (39:33-38)*

இவ்வசனங்களில் அல்லாஹ் இரண்டு வகையான மக்களை அநீதியிழைப்பவர்கள் என்று கூறுகின்றான். மேலும் இவர்கள் தமக்கெதிராகவே அநீதியிழைக்கின்றனர். இவர்கள் தமது அழிவிற்குத் தாமே காரணமாகின்றனர். ஒரு வகையினர் அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டிக் கூறுகின்றார்கள். மேலும் தாம் அல்லாஹ்வின் புறமிருந்து அவர்களிடம் வருகின்ற உண்மையான நபிமார்களை மறுத்து பொய்ப்படுத்துகின்றனர். அல்லாஹ் தூதுச் செய்தியை வழங்கி தனது நபிமார்களை அனுப்பும்போது, நபிமார்கள் வருகின்றபோது ஒரு பிரிவினர் அவர்களை பொய்ப்படுத்துகின்றனர். மேலும் நீர் பொய்யர் ஆவீர். நீர் அல்லாஹ்வின் புறமிருந்து வரவில்லை என்ற கூறி மறுத்து விடுகின்றனர்.

இந்த கருத்தை திருக்குர்ஆன் இன்னும் பல இடங்களில் விளக்கிக் கூறுகிறது.

**சூரா அல் அன்கபூத் என்னும் அதிகாரத்தின் 69 -வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

*அல்லாஹ்வைப் பற்றி பொய்யுரைப்பவனை விட அல்லது தம்மிடம் உண்மை வந்தபொழுது அதனைப் பொய்யாக்குபவரை விட கொடிய அநீதிழைப்பவர் எவர்? இத்தகு நிராகரிப்பவர்களுக்கு நரகத்தில் இருப்பிடமொன்று இல்லையா? (29:69)*

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பொய்யை இட்டுக்கட்டிக் கூறுவதற்கும் ஒரு எல்லை உண்டு. மேலும் பொய்யை இட்டுக்கட்டிக் கூறுபவர் எப்போதும் இழப்பையே சம்பாதிக்கிறார். மேலும் தோல்வி அடைகிறார்.

**கத் காப மனிஃப்தரா** - மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் (அல்லாஹ்) கூறினான். நீர் பொய்யை புனைந்து கூறினால் உமது உயிர் நாடியை துண்டித்து விடுவோம்.

அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டிக் கூறுபவனை விட மாபெரும் அநீதியிழைப்பவன் எவன்? என்று அல்லாஹ் கூறுகிறான். ஒருவர் இதன் மீது ஈமான் கொண்ட பிறகு அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டிக்கூற எவ்வாறு தைரியம் கொள்வார்? அதாவது அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டிக் கூறுகின்றவர்களின் உயிர் நாடியைத் துண்டித்து விடுவோம் என்றும், அவரை தோல்வியடையச் செய்வோம் என்றும் மிகவும் தெளிவாகக் கூறுகிறான். இந்த விஷயங்களின் மீது ஈமான் கொண்ட ஒருவர் அல்லாஹ்வின் மீது ஒருபோதும் பொய்யை இட்டுக்கட்டிக் கூற தைரியம் கொள்ளமாட்டார். அரசாங்கத்தில் ஒருவர் போலியாக தான் ஒரு அலுவலக ஊழியர் என்று பொய் கூறினால், அவருக்கு தண்டனை வழங்கப்படுகிறது. அவர் சிறைக்கு அனுப்பப்படுகிறான். இவ்வாறிருக்க, இறைவனது சக்திவாய்ந்த அரசாட்சியில் ஒருவர் பொய்யாக அல்லாஹ்வின் புறமிருந்து தான் அனுப்பப்பட்டதாக கூறினால் அவரை அல்லாஹ் பிடிக்க மாட்டானா? மேலும் அவருக்கு உதவி செய்வானா? இவ்வாறு செய்தால் நாத்திகம் உருவாகி விடும். அல்லாஹ்வின் மீது பொய்யைப் புனைந்து கூறுபவர் அழிக்கப்படுவார் என்று இறை வேதங்கள் அனைத்திலும் எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீது ஆட்சேபனை செய்கின்றவர்களின் ஆட்சேபனைக்கு இதில் மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வுலக அரசாங்கத்தின் ஏதாவது ஒரு அதிகாரியிடம் போலியாக ஒருவர் ஒரு கட்டளையை எடுத்துக் கொண்டு ஒரு அலுவலக ஊழியர் ஆக சென்றால் கூட அவர் பிடிபட்டு விட்டால் மிக கடினமாக தண்டனை கிடைக்கிறது. பிறகு ஒருவர் நான் அல்லாஹ்வின் புறமிருந்து வந்துள்ளேன் என்றும், மேலும் தான் கொண்டு வந்த செய்தியை அல்லாஹ்வின் புறமிருந்து கொண்டு வந்துள்ளேன் என்றும் (பொய்யாக) கூறினால் அவரை பிடித்து தண்டனை கொடுப்பதற்குக் கூட இறைவனுக்கு சக்தி இல்லையா?

அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டிக் கூறுபவனை விட மாபெரும் அநீதியிழைப்பவன் யார்? என்பதன் பொருள் இதுவே ஆகும். அல்லாஹ்வின் புறமிருந்து ஒரு செய்தியை இட்டுக்கட்டிக் கூறும் ஒருவரை மேலும் இவ்வாறு தனக்கெதிராகவே அநியாயம் இழைப்பவனை அல்லாஹ் பிடிக்காமல் விட்டு விடுவது சாத்தியமே இல்லை.

அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டி பொய் கூறுபவர் நிச்சயமாக அல்லாஹ்வின் பிடியின் கீழ் வந்து விடுவார் என்பது ஒரு அடிப்படை விதியாகும். இதனை அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறிவிட்டான்.

இது மட்டுமல்ல, மாறாக உண்மையையும், சத்தியத்தையும் நிராகரிக்கின்ற மற்றொரு பிரிவினரும், இறைவனின் உண்மை நபிமார்களுக்கு கீழ்ப்படியாமல் வரம்பு மீறுபவர்களாக இருந்தால் நிச்சயமாக இவர்களும் இறைவனது பிடியின் கீழ் வருகின்றனர்.

இவ்வாறு இரு பிரிவினர்கள் உள்ளனர். ஒரு பிரிவினர் அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டிக் கூறினால் அல்லாஹ்வின் பிடியின்கீழ் வந்து விடுவர். இன்னொரு பிரிவினர் அல்லாஹ்வின் புறமிருந்து வருகின்றவர்களை பொய்ப்படுத்தினால் அல்லாஹ் அவர்களையும் பிடித்து விடுகிறான். இவ்விரண்டு பிரிவினரும் தமக்குத் தாமே அநீதியிழைத்துக் கொள்கின்றனர்.

ஆக, நபிமார்களை நிராகரிக்கின்றவர்கள், இவர் சுயமாக இட்டுக்கட்டிக் கூறுகிறார்; அல்லாஹ் இவருக்கு நுபுவ்வத்தை வழங்கவில்லை என்று கூறுகிறார்கள். இதற்கு அல்லாஹ் கூறுகிறான். எவர் அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டிக் கூறுகிறாரோ அவரை நாம் நிச்சயமாக பிடிப்போம். மேலும் நபிக்காக வெளிப்படுகின்ற அடையாளங்களையும், அத்தாட்சிகளையும் பார்த்து அவரை ஏற்றுக் கொள்வதற்கு முயற்சி

செய்யுங்கள். நுபுவ்வத் தனது பிரகாசமான அடையாளங்களைக் கொண்டு வெளிப்படுகிறது. மேலும் அல்லாஹ்வின் உதவி அவரோடு இருக்கிறது. மேலும் ஒவ்வொரு புதிய பிரகாசமான அடையாளங்களை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறது. ஆக, நுபுவ்வத்தை மறுப்பவர்களுக்கு அறிவு இருந்தால் நிச்சயமாக இந்த ஆதாரத்தை வைத்து சிந்தித்துச் செயல்படலாம்.

இவ்விதமான ஆட்சேபனைகள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன் வந்த தூதர்களின் மீது சுமத்தப்பட்டன. மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதும் சுமத்தப்பட்டன. அதே ஆட்சேபனைகள் இப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது சுமத்தப்படுகின்றது.

சூரா ஸுமரின் இந்த வசனங்களுக்கு முந்தைய வசனத்தில் அல்லாஹ் திருக்குர்ஆனின் போதனையை மிகவும் சிறப்பானதாகக் கூறி இந்த சிறந்த போதனை வந்த பிறகு எவ்வித ஆட்சேபனையும் செய்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை என்று பிரகடனம் செய்கின்றான். இது திருக்குர்ஆனின் மாபெரும் அடையாளமாகும். மேலும் திருக்குர்ஆனின் ஒவ்வொரு வசனமும் ஒவ்வொரு சொல்லும் ஒரு அற்புதமாகும். மேலும் காஃபிர்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் அறிவுரை கூறுகின்றான். ஆனால் இதன் பிறகும் காஃபிர்கள் இதை மறுத்து விட்டனர். அல்லாஹ் தனது கடுமையான சோதனையை அவர்கள் மீது இறக்கினான். அதன் பிறகு அந்த மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டனர்.

எனவே, இங்கு அல்லாஹ் கூறுகிறான். நான் அனுப்பியவர்களை நீங்கள் மறுக்கின்றீர்கள் என்றால் இவ்வுலகிலும் மறுவுலகிலும் எனது தண்டனையின் பிடியின் கீழ் வருகிறீர்கள். எனவே இவ்வாறு அடம்பிடிப்பதை விட்டு விடுவதுதான் புத்திசாலித்தனமாகும்.

அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். உண்மையின் தூதுச் செய்தியைக் கொண்டு அல்லாஹ்வின் புறமிருந்து வருகின்ற எனது தூதர்களை ஏற்றுக் கொள்வதுதான் உள்ளத்தில் உள்ள இறையச்சத்தை வெளிப்படுத்தும் சிறந்த வழியாகும். ஏனென்றால் இதுதான் உங்களுக்கு வெற்றியையும் தரும். தக்வாவில் மேலும் உயர்வைத் தரும். நபி உண்மையாளர் என்பதற்கு இதுவே மாபெரும் அத்தாட்சியாகும். வெற்றிக்கு மேல் வெற்றியை வழங்கிக் கொண்டே இருப்பான்.

**சூரா யூனுஸில் அல்லாஹ் கூறுகிறான்:**

*அல்லாஹ்வுக்கு எதிராகப் பொய்யை இட்டுக்கட்டுபவனை விடவும் அல்லது அவன் அடையாளங்களைப் பொய்யாக்குபவனை விடவும் பெரும் அநீதியிழைப்பவன் எவன்? நிச்சயமாக குற்றவாளிகள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை. (10:18)*

எனவே அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டிக் கூறுபவரும் வெற்றி அடையமாட்டார்; அல்லாஹ்வின் புறமிருந்து வருகின்ற உண்மையாளரை மறுப்பவரும் வெற்றியடையமாட்டார். ஆக, இறைத் தண்டனையிலிருந்து இவ்விரண்டு இன மக்களும் தப்பவே முடியாது. ஒரு பிரிவினர் தவறாக அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டி வாதம் செய்கின்றவர் ஆவார். மற்றொரு பிரிவினர் அல்லாஹ்வின் தூதுச் செய்தியைக் கொண்டு வருபவரை எதிர்க்கின்றவர் ஆவர். மேலும் ஒவ்வொரு அறிவுடையவரும் இதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இதைத் தான் ஃபிர்அவ்னின் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.

*பிர்அவ்னின் சமுதாயத்தினருள் நம்பிக்கை கொண்டு, அந்நம்பிக்கையை மறைத்து வைத்திருந்த ஒரு மனிதர் கூறினார்: என் இறைவன் அல்லாஹ் என்று கூறுகின்ற ஒரே காரணத்திற்காக நீங்கள் ஒரு மனிதரைக் கொலை செய்யப் போகின்றீர்களா? மேலும் அவர் உங்கள் இறைவனிடமிருந்து உங்களிடம் தெளிவான சான்றுகளையும் கொண்டு வந்துள்ளார். (40:29)*

எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளின்படி வந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு சிந்திக்க வேண்டிய தருணமாகும். முஸ்லிம்களிடம் ஒரு மாபெரும் மகத்துவமிக்க வேத நூல் உள்ளது. அதை பாதுகாப்பதற்கான வாக்குறுதியை அல்லாஹ் வழங்கியுள்ளான். மேலும் இஸ்லாத்தின் எதிரிகள் எவ்வளவோ முயன்றும் கூட அதில் எவ்வித மாறுதல்களையும் கூற முடியவில்லை. 1400 வருடங்களாக அது தனது அசல் வடிவத்தில் இருந்து வருகிறது. இவ்வனைத்து விஷயத்தையும் அல்லாஹ் திருக்குர்ஆனில் ஒன்று திரட்ட முஸ்லிம்களுக்கு இது வெறும் கட்டுக்கதைகள் அல்ல. உங்களது நிலை உங்களுக்கு முன்னிருந்த சமுதாயத்தின் நிலையைப் போன்று ஆகிவிடக் கூடாது என்று கூறுகிறான்.

மேலும் **லா யுஃப்லிஹுல் முஜ்ரிமீன்** - நிச்சயமாக குற்றவாளிகள் ஒருபோதும் வெற்றியடைய மாட்டார்கள் என்று கூறி முஸ்லிம்களுக்கு அல்லாஹ் ஆறுதல் வழங்கியுள்ளான். அதாவது பொய்யாக வாதம் செய்பவர்கள் வரக்கூடும். ஆனால், அவர்கள் ஒருபோதும் வெற்றியடைய மாட்டார்கள். வெற்றியின் அளவுகோல் என்ன? அல்லாஹ்வின் புறமிருந்து வருபவர்கள் தமது போதனையை உலகில் பரப்புவது போன்று இவர்கள் தமது போதனையை ஒருபோதும் உலகில் பரப்ப முடியாது. அவர்களுக்கு ஒரு சிறிய ஜமாஅத் உருவாகி விடலாம். அவர்களிடம் சொத்து சுகங்களும் குவியலாம். இவ்வனைத்தும் நடக்கலாம். ஆனால் இறைவன் புறமிருந்து வருபவர் ஒரு ஆன்மீக நோக்கத்தை கொண்டு வருகிறார். நபிமார்கள் வந்தனர் என்றால் உலகில் ஒரு ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்துவதற்காகவும் மனிதனை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்வதற்காகவும் ஷரீஅத்தைக் கொண்டு வந்தனர். அல்லது முந்தைய போதனையை ரத்து செய்வதற்காக வந்தனர். மேலும் வழி தவறியவர்கள் இறைவனுக்கு அருகில் கொண்டு வருவதற்காக புதிய ஷரீஅத்தைக் கொண்டு வந்தனர்.

ஆக, அல்லாஹ்வின் புறமிருந்து வருபவர்களுக்கு இது அடிப்படை அளவுகோலாகும். ஒருவர் தான் இறைவன் புறமிருந்து வந்திருப்பதாக வாதம் செய்தால் அவர் இந்த இரண்டு நோக்கத்தையும் அடையவில்லை என்றால், அவர் இறைவன் மீது இட்டுக்கட்டிக் கூறுகிறார் என்று பொருள். அவர் மக்கள் மத்தியில் ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்தவில்லை என்றால், அவர் மக்களுக்கு இறை நெருக்கத்தின் பக்கம் வழிகாட்டவில்லை என்றால் அவர் பொய்யர் ஆவார் என்று பொருள்.

இக்காலக்கட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்மீது இவர் அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டிக் கூறுகிறார் (நவூதுபில்லாஹ்) என்று குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. அவர்கள் ஷரீஅத்தில் பித்அத்துகளை உருவாக்கினார்களா? அதில் ஏதாவது குறைத்துக் கூட்டிக் கொண்டார்களா? அல்லது இதற்கு மாற்றமாக திருக்குர்ஆனை வாழ்க்கையில் பேணி நடக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்களா? என்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்னாரின் புத்தகங்களை படியுங்கள். எல்லா இடத்திலும் திருக்குர்ஆனை பின்பற்றி நடக்கவே கட்டளையிட்டுள்ளார்கள் என்பது உங்களுக்கு தெரிய வரும். அவர்கள் தொழுகையில் எதையாவது குறைத்தார்களா? அல்லது இஸ்லாத்தின் ஏதாவதொரு கட்டளையை குறைத்தார்களா? அல்லது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது சுன்னத்தில் எதையாவது குறைக்கவோ கூட்டவோ செய்தார்களா? இதற்கு மாற்றமாக இவ்வனைத்தையும் மிகவும் அழகிய முறையில் நமக்கு விளக்கிக் கூறியுள்ளார்கள். உலகம் மறந்து விட்ட திருக்குர்ஆனின் ஷரீஅத்தை மீண்டும் உலகில் நிலைநாட்டவே வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கு இணங்க வந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத் (உலகில்) பரவுகிறதா அல்லது (ஒரே இடத்தில்) நின்றுவிட்டதா என்று பார்க்க வேண்டும். அல்லது ஒரு முறை வளர்ந்து பிறகு இந்த ஜமாஅத் சிறியதாகி விட்டதா என்று பார்க்க வேண்டும். குடும்பங்களின் ஒரு சிலர் மட்டும் அல்ல. குடும்பம் குடும்பமாக நாடுகளில் கூட்டம்

கூட்டமாக மக்கள் ஜமாஅத்தில் இணைகிறார்கள். இதற்கு நேர்மாற்றமாக ஆட்சேபனைகளை செய்கின்றவர்களுள் எத்தனை பேர் திருக்குர்ஆன் கூறும் ஷரீஅத்தில் நாசிக், மன்சூக் என்ற குழப்பத்தில் சிக்கியுள்ளார்கள் என்று பாருங்கள். மேலும் பல பிரிவுகளாகப் பிரிந்து காணப்படுகிறார்கள். சின்னச்சின்ன பிரச்சனைகளில் கருத்து வேறுபாடு கொண்டு ஷரீஅத்தின் கட்டளைகளை விட்டு விலகி விட்டனர். மேலும் இஸ்லாத்தோடு சிறிதும் தொடர்பு இல்லாத கருத்துகள் அடங்கிய புத்தகங்களை இவர்கள் இயற்றியுள்ளார்கள்.

பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்று பாருங்கள். கபர்களின் பெயரில் நேர்த்திக்கடன் செய்கிறார்கள். பீர்மார்களின் வீட்டிற்குச் செல்கிறார்கள். தொழுகை கூட சரியாக தொழாத பீர்மார்களிடம் சென்று வேண்டுதல் வைக்கப்படுகிறது. அவர்களிடம் வேண்டுதல் செய்கின்றனர். கபருக்குச் சென்று வேண்டுகின்றனர். இவ்வனைத்தும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காலத்தில் இருந்ததா? அல்லது இவ்வாறு செய்ய ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்களா? இவர்கள் தாங்களே இஸ்லாத்தில் இந்த பித்அத்துகளை உருவாக்கி விட்டார்கள்.

பிற்காலத்தில் தான் நபி என்று கூறி ஒரு வாதம் செய்பவர் எழுந்தார். பஹாவுல்லா என்பவர் அவ்வாறு வாதம் செய்தார். ஆனால் அல்லாஹ்வின் உதவி அவருக்கு இல்லை என்பதால் அவருடைய உண்மைத்துவம் நிரூபணமாகவில்லை. இறை உதவி அவருக்கு கிடைத்ததாக நமக்கு எங்கும் தென்படவில்லை. அவர் எவ்வித பிரகாசமான அடையாளத்தையும் காட்டவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் கியாமத் வரை நிலைத்திருக்கின்ற இஸ்லாமிய ஷரீஅத்தில் அவர் குறை காண முன்வந்தார். இதன் காரணமாக ஒரு குறுகிய காலத்திற்கு அவரை ஏற்றுக் கொண்ட மக்கள் அவருடன் இணைந்தார்கள். ஆனால், திருக்குர்ஆன் மற்றும் இந்த ஷரீஅத்தின் பிரபல்யத்திற்கு எதிராக இவருடைய பிரபல்யம் ஒன்றும் இல்லை. ஆனால் இப்போது பஹாவுல்லாவின் ஷரீஅத்தை ஏற்றுக் கொள்பவர்கள் ஒன்றிரண்டு பேர் எங்காவது தென்படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு மதிப்பே இல்லை. ஆனால், திருக்குர்ஆனின் மதிப்பை எப்படியாவது கெடுக்க வேண்டும். அதை ஏளனத்திற்குள்ளாக்க வேண்டும் என்று முழு உலகிலும் திட்டமிட்டு பல Scheme –களை செய்தாலும் அது தொடர்ந்து உலகில் பரவிக் கொண்டே செல்கிறது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலம் இலட்சக்கணக்கான பேர் திருக்குர்ஆனின் போதனைகளின் கீழ் வந்து தங்களின் ந.ஜாத்திற்கு வழிவகுக்கின்றனர்.

ஆக, இந்த பொய்யர்கள் ஒருபோதும் வெற்றியடையமாட்டார்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். பௌதீகப் பொருட்களை ஒன்றுதிரட்டி விடுவது அல்லது மக்கள் கூட்டத்தை ஒன்றுசேர்ப்பது உண்மையான வெற்றியல்ல. மாறாக, அல்லாஹ்வின் போதனை இதற்கு எதிரில் இலட்சம் மடங்கு அதிகமாக பரவிக் கொண்டே இருப்பது அல்லது அது முன்னேறிக்கொண்டே இருப்பது இதுவே உண்மையான வெற்றியாகும்.

அல்லாஹ்வின் புறமிருந்து வருகின்ற நபிமார்கள் தெளிவான அடையாளங்களைக் கொண்டு வருகின்றனர். வானங்கள் மற்றும் பூமியின் உதவி அவர்களோடு இருக்கும். இவர்களே வெற்றியின் பக்கம் செல்பவர்கள் ஆவர். மேலும் இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் உண்மையை நிரூபிக்கும் ஆதாரமும் இதுவே ஆகும்.

ஆக, அஹ்மதிகளை பஹாயிகளோடு இணைத்துக் கூற விரும்புபவர்கள் அறிவுப்பூர்வமாக சிந்திக்க வேண்டும். அல்லாஹ்வால் நியமிக்கப்பட்ட அளவுகோலை வைத்து நீங்கள் முடிவெடுங்கள். இரண்டும் ஒன்றுதானா என்று பிறகு பாருங்கள்.

உண்மையைக் கொண்டு வருபவர் அல்லாஹ்வின் புறமிருந்து உதவிகளைப் பெற்று தெளிவான அடையாளங்களுடன் வருபவர் பொய்யை அவன் மீது இட்டுக்கட்டிக் கூறுவதில்லை. மேலும் அவர் உண்மையில் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவராவார். நான் ஓதிய இறைவசனங்களை இந்த ஒரே

கருத்தைத்தான் வலியுறுத்திக் கூறுகின்றன. அதாவது அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டிக் கூறுபவனை விட மாபெரும் அநியாயக்காரன் எவன்? மேலும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட உண்மையாளரை மறுப்பவரை விட மிகவும் அநியாயக்காரன் யார்? மேலும் மறுப்பவர்கள் ஸித்க் – உண்மையை மறுக்கிறார்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். இரண்டாவது வசனத்தில் அவர்கள் ஹக் – சத்தியத்தை மறுக்கிறார்கள் என்று கூறுகிறான். மூன்றாவது வசனத்தில் அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை மறுக்கின்றனர் என்று கூறுகிறான்.

ஆக, அல்லாஹ்வின் புறமிருந்து வருபவர் தனது தூதுச் செய்தியிலும், சொல்லிலும் நிச்சயமாக இது அல்லாஹ்வின் புறமிருந்து வந்ததாகும் என்பதில் உண்மையாளராக இருப்பார். மேலும் அவர் கொண்டு வருகின்ற தூதுச் செய்தி உண்மையானதாகவும், சத்தியமாகவும் இருக்கும். மேலும் அது அந்த தூதுச் செய்தியை இறைவன் புறமிருந்து தான் வந்துள்ளது என்பதை வெளிப்படுத்தும். மேலும் அந்த தூதுச் செய்தி இறைவனது உதவியையும் தெளிவான அடையாளத்தையும் கொண்டிருக்கும்.

நான் ஓதிய வசனங்களுள் அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். இறை உதவியைப் பெற்று இறை தூதுச் செய்தயை கொண்டு வருபவரை ஏற்றுக் கொள்பவர்கள், தக்வாவின் வழிநடப்பவர்கள் ஆவர். அவர்கள் தமது இறைவனிடம் தாம் விரும்புவது எல்லாவற்றையும் பெறுவார்கள். அவர்களுக்கு மன அமைதியும் கிடைக்கும். அவர்களிடம் தன்னிறைவு ஏற்படும். நன்மையை செய்வதற்கான ஆசையும் பிறக்கும்.

அவர்கள் விரும்புவதெல்லாம் அவர்களுக்கு கிடைக்கும் என்று அல்லாஹ் கூறுவதன் பொருள் அவர்கள் எப்போதும் பௌதீகப் பொருட்களை விரும்புகிறார்கள். அது அவர்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கும் என்பது அல்ல. மாறாக முதலில் தக்வாவைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறவே அவர்கள் விரும்புவார்கள். அதன் காரணமாக அல்லாஹ் அவர்களுக்கு அருட்கொடைகளை வழங்குவான். அவர்களது விருப்பம் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு இணங்க அமைந்து விடும். இவ்வாறான மக்களைப் பற்றியே அல்லாஹ் கூறுகிறான்.

**நஹ்னு அவ்லியாவுகும் ஃபில் ஹயாதித் துன்யா வஃபில் ஆகிரா** – அதாவது நாம் இவ்வுலகிலும் மறு உலகிலும் உங்களுக்கு நண்பன் ஆவோம். அல்லாஹ் நற்செயல் செய்கின்றவர்களுக்கு நற்கூலி வழங்குபவன் ஆவான் என்பதால் அவன் நற்செயல் செய்பவர்களுக்கு நற்கூலி வழங்குகிறான். மேலும் அவர்களுக்கு இவ்வுலகம் மற்றும் மறுமையில் அல்லாஹ் சொர்க்கத்தை வழங்குகிறான். நிரந்தர மனப்பான்மையோடு நற்செயல் செய்பவர்களுக்கும், தக்வாவில் நிலைத்திருப்பவர் களுக்கும், அல்லாஹ்வோடு விசுவாசமுடன் தொடர்பு வைத்திருப்பவர்களுக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குகிறான்.

இதற்கு அடுத்த வசனத்தில் அல்லாஹ் இவ்விஷயத்தை இன்னும் விளக்கமாக கூறியுள்ளான். அதாவது இறைவனால் அனுப்பப்பட்டவரை ஏற்றுக் கொள்வதன் காரணமாக தக்வாவின் வழி நடக்க முயற்சி செய்வதன் காரணமாக, நற்செயல்கள் செய்ய முயற்சி செய்வதன் காரணமாக மனித பலவீனத்தின் காரணமாக இறைவனுக்கு விருப்பமில்லாத செயலை செய்து விடுகின்றபோது அதன் தீய விளைவுகளை அல்லாஹ் அகற்றி விடுகின்றான். ஏனென்றால் அந்த செயலை செய்வதற்கு முன் நன்மைக்காக முயற்சி செய்யப்படுகிறது. ஒரு நல்லெண்ணம் இருக்கிறது.

அல்லாஹ் தன் அடியானுக்கு எந்த அளவுக்கு கருணை மற்றும் அருளை வழங்குகிறான். இதை கற்பனை செய்வதற்கு இதுவே போதுமானதாகும். தவறு செய்து விட்டால் அதற்குரிய தண்டனை அதே அளவுதான். ஆனால் நன்மைக்கான கூலி அதைவிட 10 மடங்கு அதிகமாகும். மனிதன் அடம்பிடித்துக் கொண்டு தவறிழைப்பதில் தைரியம் காட்டாவிட்டால் நன்மையானது தீமையின் தீய விளைவுகளை முறித்து விடுகிறது. மேலும் அல்லாஹ் அதனுடைய தீய விளைவுகளை முற்றிலும் அகற்றி விடுகின்றான். மேலும்

நற்செயல் செய்வதற்கான நற்கூலியை வழங்குகிறான். இவ்வுலகிலும் இம்மக்கள் தமது நன்மையைக் கவனமாக செய்து தமது பௌதீகத்தையும் சொர்க்கமாக்கி விடுகிறார்கள். மறுமையிலும் இவர்கள் அல்லாஹ்வின் சொர்க்கத்தை பெறுபவர்கள் ஆவர்.

ஆக அல்லாஹ்வின் புறமிருந்து வந்தவரை ஏற்றுக்கொண்டு மன அமைதியை பெறுவதும் அல்லாஹ்வின் புறமிருந்து வந்தவரின் உண்மைக்கு ஒரு அளவுகோலாகும். இக்காலக்கட்டத்தில் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் பெருமளவில் இதற்கு சாட்சி ஆவார்கள். இதுமட்டுமின்றி புதிதாக ஜமாஅத்தில் நுழைந்தவர்கள் கூட மன நிம்மதியைப் பெற்று தமது ஈமானை உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள். இது தொடர்பாக தினமும் எனக்கு பல கடிதங்கள் வந்தவண்ணம் உள்ளன.

பிறகு அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

**அலைஸல்லாஹு பிகாஃபின் அப்தஹு** - அல்லாஹ் தன் அடியானுக்கு போதுமானவன் அல்லவா? (39:37) என்று கூறி இன்னும் நமக்கு ஆறுதலை வழங்குகிறான். ஆட்சேபனை செய்பவர்கள் இவர் பொய்யர் என்று ஆட்சேபனை செய்கிறார்கள். அல்லாஹ்வின் புறமிருந்து வந்தவரை மறுத்து எந்த அநியாயத்தை அவர்கள் சுமத்துகின்றார்களோ அந்த அநியாயத்திற்கு இவர்களே ஆளாகின்றார்கள். இவ்வாறு பழிசுமத்துபவர்களின் தங்குமிடம் நரகமே ஆகும் என்று அல்லாஹ் கூறுகிறான். மேலும் அவரை ஏற்றுக் கொள்பவர்களின் தீமைகளை அவர்களிடமிருந்து அகற்றி அல்லாஹ் அவர்களுக்கு நன்மைக்கான நற்கூலியை வழங்குவான். தக்வாவில் அவர்கள் முன்னேறுவதற்காக மேலும் மேலும் நன்மை செய்வதற்கான வாய்ப்பை வழங்குவான்.

அல்லாஹ் தன் அடியானுக்கு போதுமானவன் அல்லவா? என்று கூறி பொய்யாக்குபவர்களுக்கும் அல்லாஹ் கூறுகிறான். நீங்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவர்களுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்திவிட முடியாது. ஏனென்றால் இறைவன் அவருக்கு உதவியாளனாக இருக்கிறான். மேலும் அவரை ஏற்றுக் கொண்ட மக்களும் அவருக்கு உதவியாளர்கள் ஆவர்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை இதற்கு மாபெரும் சான்றாகும். இறைவன் அன்னாருக்கும் அன்னாரது சஹாபாக்களுக்கும் ஒவ்வொரு நொடியும் உதவி புரிந்தான். போர்களில் முஸ்லிம்கள் ஷஹீதானார்கள். ஆனால். எதரிகளின் இழப்பை விட எப்போதும் முஸ்லிம்களுக்கு குறைவாகவே இழப்பு ஏற்பட்டது. மேலும் எதிரிகள் எதிர்பார்த்த நோக்கத்தை அதாவது இஸ்லாத்தை முழுமையாக அழித்து விட வேண்டும் என்ற தமது நோக்கத்தை அடைய முடியவில்லை. இன்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இஸ்லாத்தின் எதிரிகள் மிகவும் வெறுக்கத்தக்க வகையில் தாக்குதல் நடத்துகின்றனர். குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் இஸ்லாத்திற்கு எந்த இழப்பையும் இவர்களால் ஏற்படுத்த முடியவில்லை. மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத்தை அதன் உண்மை வடிவில் முழுமையாக பின்பற்றுகின்ற ஒரு ஜமாஅத் இன்றும் உலகில் உள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கியாமத் நாள் வரை நபி ஆவார்கள் என்பதற்கு இதுவே மாபெரும் சான்றாகும். மேலும் அன்னாரால் கொண்டுவரப்பட்ட ஷரீஅத் உயிருள்ள ஷரீஅத்தாகும்.

இஸ்லாத்தின் எதிரியின் மிரட்டல்கள் மற்றும் முயற்சிகள் முந்தைய காலத்திலும் இஸ்லாத்திற்கு எந்த இழப்பையும் ஏற்படுத்தவில்லை. வரும் காலத்திலும் ஏற்படுத்த முடியாது. மேலும் அல்லாஹ் கூறுகிறான். நான் இவர்களுக்கு போதுமானவன் ஆவேன். மேலும் எனது அடியார்களை எதிரிகளின் தீமையின் தீய விளைவுகளிலிருந்து எப்போதும் பாதுகாப்பேன். இதற்காக இக்காலகட்டத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசரை அல்லாஹ் இஸ்லாத்தின் எதிரிகளின் தாக்குதல்களை புத்துணர்ச்சி மற்றும் உறுதியுடன் மறுப்பதற்காக அனுப்பினான். முஸ்லிம்கள் இந்த உண்மையை அந்தோ புரிந்திருக்க வேண்டுமே!

மேலும் இந்த இறைவனின் போர் வீரரை ஏற்றுக் கொண்டு இறையுதவி எப்போதும் கிடைத்துக் கொண்டிருக்கிற ஜமாஅத்தோடு இணைய வேண்டும்.

இங்கு அல்லாஹ் **அலைஸல்லாஹ் பிகாஃபின் அப்தஹு** என்று கூறுவதில் அப்த் – அடிமை என்ற சொல்லுக்கு என்ன பொருள்? இதை விளங்கிக் கொள்வது மிகவும் அவசியமாகும். அல்லாஹ்வின் அடியான் என்று கூறலாம். இவ்வுலகில் வருகின்ற எல்லோருமே அல்லாஹ்வின் அடியார்கள் தான். அல்லாஹ்விற்கு முழுமையாக கட்டுப்படுபவர்தான் உண்மையான அப்த் – அடிமை ஆவார். மேலும் அவனது மார்க்கத்திற்கு உதவி செய்பவரும் நஹ்னு அன்ஸாருல்லாஹ் (61:15) என்று பிரகடனம் செய்யும் கூட்டத்தோடு இணைபவரும், அல்லாஹ்வை வணங்குபவரும், அல்லாஹ்வின் புகழை எப்போதும் எடுத்துரைப்பவரும், அல்லாஹ்வோடு மிக ஆழமான அன்பின் தொடர்பு வைத்திருப்பவரும், அல்லாஹ்விற்காக ரோஷம் கொள்பவரும் தான் உண்மையான அப்த் – அடிமையாவர். இங்கு இதுதான் பொருள் ஆகும்.

மேலும் இதன்படி மிகவும் உயர்ந்த தகுதியை அடைந்த, வேறு யாராலும் அடைய முடியாத தகுதியுடைய ஒரே மனிதர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களே ஆவார்கள். அன்னாருக்காக அல்லாஹ் போதுமானவன் என்ற பண்பை வெளிப்படுத்திய காட்சியை பார்க்கின்றபோது மனிதன் ஆச்சரியத்தில் மூழ்கிவிடுகின்றனர். ஒவ்வொரு எதிரியிடமிருந்தும் அன்னாரை ஒரு மனிதரால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத முறையில் காப்பாற்றினான். மேலும் எந்த மனித சக்தியாலும் இவ்வாறு காப்பாற்ற முடியாது. ஹிஜ்ரத்தின் போது அல்லாஹ் அன்னாரைக் காப்பாற்ற போதுமானவனாக இருந்தான். சன்மானம் பெறுவதற்காக அன்னாரைப் பின்தொடர்ந்து வந்தவருக்கு எதிரில் அன்னாரைக் காப்பாற்ற இறைவன் போதுமானவனாக இருந்தான். போர்களில் இறைவன் போதுமானவனாக இருந்தான். அன்னார் நிராயுதபாணியாக இருந்த போது தூக்கத்திலிருந்து எழுப்பி வாளை ஏந்தியவாறு இப்போது உம்மை யார் காப்பாற்றுவார் என்று ஒருவர் கேட்டபோது அன்னாரைக் காப்பாற்ற இறைவன் போதுமானவனாக இருந்தான். இவ்வாறு சஹாபாக்களுக்கும் அல்லாஹ் போதுமானவனாக இருந்தான். அந்த சஹாபாக்களின் உள்ளத்திலிருந்து மனிதர்களைப் பற்றிய அச்சம் நீங்கிவிட்டது. மேலும் அவர்கள் முழுமையாக அல்லாஹ்விற்காக ஆகிவிட்டார்கள். அவர்களுக்கு ரலியல்லாஹு அன்ஹும் என்ற நற்செய்தி கிடைத்தது. மேலும் துரதிர்ஷ்ட காஃபிர்கள் தங்களது தீய முடிவை அடைந்தார்கள்.

அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ் நேர்வழி கொடுத்தவர்கள்தான் நேர்வழியைப் பெறுகிறார்கள். மேலும் அல்லாஹ் நேர்வழி காட்டிய ஒருவரை எவராலும் வழிகெடுக்க முடியாது. எனவே நேர்வழி பெறுவதற்கும் அல்லாஹ்வின் முன் குனிய வேண்டும். ஈமானில் முன்னேறுவதற்கும் அவன் பக்கம் குனிய வேண்டும். நேர்வழி பெற்ற பிறகு அதில் நிலைத்திருப்பதற்கும் அவன் பக்கம் எப்போதும் குனிய வேண்டும். நேர்வழி பெற்ற பிறகு அதில் நிலைத்திருப்பதற்கும் அவன் பக்கம் எப்போதும் குனிய வேண்டும். நேர்வழி பெற்றவர்கள் உண்மையான அடியாராகத் திகழ்கிறார்கள். இதில்தான் அவர்களுக்கு நிரந்தர வாழ்வு கிடைக்கும் என்றும், இவ்வாறுதான் வெற்றி பெற முடியும் என்றும் அவர்கள் நன்கு அறிவர். மேலும் நபிக்கும் அவரது ஜமாஅத்திற்கும் இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்பவர்கள் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து தப்ப முடியாது. மேலும் ரஸூல்மார்களோடு பகைமை கொள்பவர்களை அல்லாஹ் பழிவாங்குகிறான். அல்லாஹ்வின் கோபம் இவ்வுலகிலும் மறு உலகிலும் வெளிப்படுகிறது. இறைவனது அன்பிற்குரியவர்களிடம் பகைமை கொள்வது அல்லாஹ்வின் பார்வையில் மாபெரும் விஷயமாகும். அவர்களுக்கு அல்லாஹ் தனது வல்லமையின் தோற்றத்தை வெளிப்படுத்துகின்றான். இதன் காரணமாக அவர்கள் சில நேரம் படிப்பினைக்கு அடையாளமாகி விடுகிறார்கள். பிறகு இவர்களுக்கு உலகில் எங்கும் அடைக்கலம் கிடைப்பதில்லை. அல்லாஹ் கூறுகிறான். இவர்களுடைய முடிவும் மிகத் தீமையாக இருக்கும்.

இதுவே இறைவன் புறமிருந்து வருபவர்களின் அடையாளமாகும். அவர்களின் உண்மையை நிரூபிப்பது மட்டுமின்றி எதிரிகளின் தாக்குதலிலிருந்தும் அவர்களை காப்பாற்றுகின்றான் அவர்களுக்காக எப்போதும் இறைவன் அடையாளங்களை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றான். மேலும் எதிரிகளை இறைவன் பழிவாங்கவும் செய்கின்றான்.

அல்லாஹ்வின் அன்பிற்குரியவர்கள் மற்றும் அவர்களை ஏற்றுக் கொள்பவர்கள் ஃபத்குலீ ஃபீ இபாதி என்ற நற்செய்தியை பெறுபவர்கள் ஆகின்றார்கள். இறையச்சத்தின் வழி நடப்பவர்கள், நற்செயல்கள் செய்து இறைவனின் விருப்பத்தைப் பெறுபவர்கள் ஆகின்றனர். மேலும் எல்லாவற்றிற்கும் மேலாக இந்த உயர் தகுதியை பெற்றது நமது நபி (ஸல்) அவர்கள் ஆவார்கள். அன்னாரின் உயர் தகுதிகள் காரணமாக அன்னாரின் அடியார்களுக்கும் அல்லாஹ் போதுமானவன் ஆகிவிட்டான். மேலும் அவர்களுக்காகவும் தனது வல்லமையை அல்லாஹ் வெளிப்படுத்துகின்றான். அன்னாரின் அடிமைகளிலேயே முழுமையான அடிமை அன்னாரின் உண்மை நேசர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஆவார்கள்.

அலைஸல்லாஹு பிகாஃபின் அப்தஹு என்ற வசனத்தை அல்லாஹ் அவர்களுக்கு பலமுறை இல்ஹாமாக இறக்கினான். முதல் முறையாக அன்னாரின் தந்தையின் மரணத்தைப் பற்றிய செய்தியை அறிவித்த உடன் அவர்கள் மிகவும் கவலையுற்றார்கள். பிறகு தந்தையார் இறந்தார்கள். அப்போது அல்லாஹ் அன்னாரிடம் கூறினான். **அலைஸல்லாஹு பிகாஃபின் அப்தஹு** – அல்லாஹ் தன் அடியானுக்கு போதுமானவன் அல்லவா?

அல்லாஹ் கூறுகிறான். நீர் அல்லாஹ்வின் அடிமையாக இருக்கின்றீர். நான் உம்மை நேசிக்கின்றேன். எனவே, உமது தந்தையின் மரணத்திற்கு நீர் கவலையடைய வேண்டாம். நான் உம்மோடு இருக்கிறேன். ஆக, அல்லாஹ்வின் நேசத்தின் வெளிப்பாடே ஆகும். மேலும் நாம் உம்மை கவலைகளிலிருந்து விடுதலை வழங்கிவிட்டோம். மேலும் ஆதரவு அளித்தது மட்டுமின்றி அன்னாருடைய கைகளால் அல்லாஹ் எல்லாருக்கும் உணவளித்தான். இன்றுவரை உணவளித்துக் கொண்டிருக்கின்றான். இதற்குப் பிறகு பல முறை இந்த இல்ஹாம் இறங்கியது. ஒருமுறை அல்ல; பலமுறை இந்த இல்ஹாம் இறங்கியுள்ளது. மேலும் அல்லாஹ் எதிரியின் ஒவ்வொரு தீய தாக்குதலிலிருந்தும் அன்னரைக் காப்பாற்றினான். மேலும் அன்னாருக்கு போதுமானவனாக விளங்கினான். மேலும் சில நேரங்களில் எதிரியை பழிவாங்கவும் செய்தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வாழ்க்கை இவ்வாறான பல சம்பவங்களால் நிறைந்து காணப்படுகிறது.

இறைவன் எவ்வாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு போதுமானவனாக இருந்து அன்னாரை எதிரிகளிடமிருந்து காப்பாற்றி வந்தானோ அவ்வாறே உண்மையாகப் பின்பற்றியதன் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மீது எதிரிகள் பல பொய் வழக்குகளைப் போட்டு தொல்லை கொடுக்கும்போதெல்லாம் அல்லாஹ் அன்னாரைக் காப்பாற்றினான். அரசாங்கத்திடம் எதிரிகள் புகார் செய்தனர். காவல்துறை அதிகாரிகள் அன்னாரின் வீட்டை சோதனையிட வந்து விட்டார்கள். ஆனால் அல்லாஹ் எப்போதும் தான் போதுமானவன் என்பதை நிரூபித்து விட்டான்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் நீர் உமது பணியை செய்து கொண்டே இருப்பீராக. காஃபிர்கள் அநீதியிழைக்கிறார்கள் என்றால், ஏளனம் செய்கிறார்கள் என்றால் செய்யட்டும் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கூறினான். **இன்னா கஃபைனாகல் முஸ்தஹ்ஸிஈன்** – ஏளனம் செய்பவர்களுக்கு எதிராக உமக்கு நிச்சயமாக நாம் போதுமானவன் ஆவோம். மேலும் இஸ்லாத்தின் எதிரிகளை அல்லாஹ் எவ்வாறு பழிவாங்கினான் என்று முழு உலகமும் பார்த்தது. மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் போதுமானவன் ஆகி விட்டான்.

**அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கூறுகிறான்:**

**ஃபத்பிஊனி யுஹ்ஸிப்குமுல்லாஹ்** - என்னை பின்பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான். மேலும் அன்னாரைப் பின்பற்றுவதில் மிகவும் உயர் தகுதியைப் பெற்றவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆவார்கள். எனவேதான் முழு உலகமும் ஒரே மார்க்கத்தில் ஒன்றுசேர்கின்ற மாபெரும் பணியை அல்லாஹ் அவர்களிடம் ஒப்படைத்தான். இவ்வனைத்தும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றியதன் காரணமாகவே அல்லாஹ்வும் அன்னாரை நேசித்தான். இதன் காரணமாகவே சில வசனங்களை மற்றும் சில பகுதிகளை அன்னாருக்கு இல்ஹாம் மூலம் அல்லாஹ் அறிவித்தான்.

**இன்னா கஃபைனாகல் முஹத்ஹஸிஊன்** - இதுவும் அவர்களுடைய இல்ஹாம்களுள் ஒரு இல்ஹாம் ஆகும். மேலும் அல்லாஹ் தன் உதவியை இறக்கி எதிரிகளை எப்போதும் தலைகுனிய வைத்தான்

மரியாதையின் படித்தரங்கள் மாறும்போது மனிதனுக்கு உணர்வு கெட்டுப் போய் விடுகிறது. மேலும் வறட்டுத் தனமான போக்கு எல்லையை கடக்கும்போது கண்ணியம் கிடைப்பதில்லை. பிறகு மனிதன் தனக்கு அவமானம் ஏற்படுகிறது என்பதை உணர்ந்து கொள்வதில்லை. தங்களை பெரிய ஆலிம் என்று கருதிக் கொண்டவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிரில் வருகின்றபோது முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் ஒரு சம்பவம் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நீதிமன்றத்தில் நாற்காலியில் அமர்ந்திருப்பதைக் கண்டு தனக்கும் நாற்காலி தரப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்த போது நீதிபதி அவரை ஏசிவிட்டார். பிறகு நீதிமன்றத்திற்கு வெளியே வந்து ஒரு நாற்காலியில் அமர்ந்த போது அங்கும் காவலாளி அவரை நாற்காலியில் அமர விடவில்லை. இவ்வாறு பல சம்பவங்கள் உள்ளன. அதை அனைத்தையும் கூறுவதற்கு நேரமில்லை.

இன்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை எதிர்த்து தங்களது நோக்கத்தை ஒருபோதும் அவர்களால் அடைய முடியாது. அவர்களின் உண்மைக்கும் மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களால் முன்னறிவிக்கப்பட்ட மஸீஹ் என்ற உண்மைக்கும் சான்றை நாம் ஒவ்வொரு நாளும் பார்த்து வருகிறோம்.

இதுவே அல்லாஹ் எப்போதும் போதுமானவன் என்பதற்கு சான்றாகும். இதை ஒவ்வொரு அஹ்மதியும் மேலோட்டமாகப் பார்க்காமல் ஆழமாக சிந்திக்க வேண்டும். இதனால் ஈமான் உறுதியாகிறது. மேலும் அல்லாஹ்வே போதுமானவன் என்று இருக்கின்ற கூட்டத்தோடு எப்போதும் தொடர்புடன் இருக்க வேண்டும். நாம் தக்வாவின் வழியில் நடந்தவாறு, அல்லாஹ்வோடும், ரஸூலுல்லாஹ்வோடும், அன்னாரை நேசிக்கின்ற உண்மை அடியாரோடும் தொடர்பு ஏற்படுத்தினால்தான் இது நடக்கும்.

இன்று அல்லாஹ்வின் அருளால் நாம்தான் அல்லாஹ்வின் வாக்குறுதி ஒவ்வொரு நாளும் புதிய பொலிவுடன் நிறைவேறுவதைக் கண்டு கொண்டிருக்கிறோம். இன்று நாமே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு உண்மையான முறையில் நேசம் கொள்பவர்களாவோம். எனவே நமது எதிரி நம்மை ஏளனம் செய்வதற்கும், பொய்யாக குற்றம்சுமத்துவற்கும், பெயரைக் கெடுப்பதற்கும் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் அல்லாஹ் எவ்வாறு முந்தைய காலகட்டங்களில் போதுமானவனாக இருந்தானோ அதேபோன்று இப்போதும், வருங்காலத்திலும் போதுமானவன் ஆவான். இன்ஷா அல்லாஹ். இந்த தீய உலமாக்கள் மற்றும் அவர்களை பின்பற்றுகின்றவர்கள் மற்றும் நீதியின் நாற்காலியில் அமர்ந்திருப்பவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு தீங்கு செய்தாலும், இழப்பை ஏற்படுத்தவும் முயற்சி செய்கிறார்கள்.

தற்போது நடந்த ஒரு சம்பவத்தைக் கேளுங்கள்.

நமது அஹ்மதிகளின் மீது ஒரு வழக்கு போடப்பட்டது. மவ்லவிகள் சில சுவரொட்டிகளை ஒட்டினார்கள். ஒரு அஹ்மதி அல்லது சில அஹ்மதிகள் அதை கிழித்து விட்டார்கள் என்பதுதான் அந்த வழக்கு. இந்த வழக்கு அடிப்படையற்ற ஒரு வழக்காகும். இதில் எந்த உண்மையும் இல்லை. எங்களுக்கு முன் நின்றுகொண்டு எங்களைத் திட்டினாலும் நாங்கள் பொறுமையைக் கடைபிடிப்பவர்களாவோம். மேலும் எந்த அளவு பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எங்களுக்கு போதித்துள்ளார்கள். மேலும் ஒருபோதும் நாங்கள் பழிவாங்க முயற்சி கூட செய்ததில்லை. இவர்களுக்கு அறிவு இருந்தால் சற்று சிந்தித்துப் பார்த்தால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு தொல்லை கொடுப்பவர்களை அல்லாஹ்தான் பழிவாங்கி வருகிறான் என்பது புரிந்து விடும். காவல்துறை இந்த வழக்கை பதிவு செய்தது. சிறிய நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது. மேலும் தள்ளுபடியாகி விட்டது. வழக்கு ரத்தாகி விட்டது. பிறகு உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்தின் நடுவர் ராஹா ஸாஹித் மஹ்மூத் சாஹிப் தனது தொண்டர்களை மகிழ்விப்பதற்கு வழங்கிய தீர்ப்பு மிகவும் அநியாயமான தீர்ப்பு ஆகும். தனது தீர்ப்பில் இவ்வாறு எழுதுகிறார்:

புனிதர்களின் கண்ணியத்தை மதிக்காத இந்த குற்றவாளிகள் நீதிமன்றத்தில் முறையிடுவதற்கு தகுதியற்றவர்கள் ஆவர். நமது பார்வையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்தான் புனிதர் ஆவார்கள். மேலும் ஒரு அஹ்மதி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்ணியத்தைக் குறைப்பதைக் கற்பனை கூட செய்து பார்க்கமாட்டார். நாம் அன்னாரின் உண்மை அடிமைக்கு அடிமையாவோம். மேலும் நாம் சஹாபா (ரலி) அவர்களின் கண்ணியத்தை மதிக்காத கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல.

இந்த நீதிபதியின் பார்வையில் இந்த மவ்லவிகள்தான் புனிதர்கள் என்றால், இந்த மவ்லவிகளைப் பற்றி நாங்கள் குறை கூறுவதில்லை. ஆனால் இவர்களை எங்களால் புகழ முடியாது. இவ்வாறான நீதிபதிகள் தான் இவர்களைப் புகழ வேண்டும். நாங்கள் ஒருபோதும் புகழ்பாடமாட்டோம். நாம் எப்போதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் அனைத்து கண்ணியவான்களின் கண்ணியத்தை எடுத்துரைப்பவர்கள் மற்றும் உயர் தகுதியை அடையாளம் கண்டு கொள்கின்றவர்கள் ஆவோம்.

இதுவே பாகிஸ்தானின் நீதியாகும். இவர்களிடம் நாம் ஒருபோதும் நீதியை எதிர்பார்க்கவில்லை. நாங்கள் அல்லாஹ்வின் பண்புகளை நன்கு தெரிந்தவர்கள் ஆவோம். நாங்கள் அவனிடமே வேண்டுகிறோம். அவன் முன்னிலையில் குனிகிறோம். மேலும் அவனே எங்களுக்கு போதுமானவன் ஆவான். ஆனால் இந்த மக்கள் நிச்சயமாக அவன் பிடியின் கீழ் வருவர். ஆனால் புரிந்து கொள்வதில்லை.

பாகிஸ்தானின் அரசியல் தலைவர்களுக்கு நான் கூறுகிறேன். நீங்கள் இறை தண்டனையை அழைக்காதீர்கள். அதன் அடையாளம் வெளிப்பட ஆரம்பித்து விட்டது. இதோடு எல்லாவற்றையும் நிறுத்திக் கொள்ளுங்கள். இதற்கு ஒரே வழி அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்பதுதான்.

மனதில் உள்ளதை அளந்து பார்க்கும் அளவுகோல் உங்களிடம் இருந்தால், எங்கள் உள்ளத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது அலைபாய்கிறது. கடல் கொண்டு எழுகிறது. நீங்கள் இதன் அருகில்கூட நெருங்க முடியாது. அவ்வாறு அளந்து பார்க்கின்ற அளவுதான் எதுவும் இல்லை என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

பாகிஸ்தான் பொதுமக்களுக்கு நான் கூறுகிறேன். இந்த பெயர்தாங்கி, சுயநல மவ்லவிகளைப் பின்பற்றி உங்களது இம்மையையும் மறுமையையும் சீர்கெடுத்துக் கொள்ளாதீர்கள். இறைவனின் தண்டனைக்கு குரல் கொடுப்பதற்கு பதிலாக இறைவனின் அடைக்கலத்தின்கீழ் வர முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் எப்போதும் தீங்கிலிருந்து பாதுகாப்பானாக.

பாகிஸ்தானில் சில காலங்களுக்குப் பிறகு மவ்லவிகள் மக்களை தூண்டி விடுவதன் காரணமாக ஏதாவது ஒரு அஹ்மதியின் ஷஹாதத் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இதுவும் பாகிஸ்தான் அரசு நியமித்துள்ள சட்டங்களின் காரணமாகவே இவ்வாறு நிகழ்கிறது. மேலும் இந்த சட்டங்கள்தான் இன்று நாட்டில் சட்ட ஒழுங்கை அழித்து விட்டது. இன்று வீட்டில் எந்த சட்டமும் முறைப்படி இருப்பதாக தெரியவில்லை.

இன்று நான் மீண்டும் ஒரு துக்கத்திற்குரிய செய்தியை அறிவிக்கிறேன். நமது ஒரு அஹ்மதி சகோதரர் சவுத்ரி குலாம் காதிர் சாஹிப் அவர்களின் மகன் சயீத் அஹ்மத் சாஹிப் கோட்ரி என்ற ஊரில் வசித்து வந்தார்கள். அங்கு அவரை ஷஹீதாக்கி விட்டனர். இரவு ஏறக்குறைய 9.00 மணி அளவில் இவர்கள் வேலை பார்க்கின்ற கடையிலிருந்து வீட்டிற்கு சென்றபோது வீட்டின் வாசலை அடைந்தவுடன் ஒருவர் இவர்களின் நெற்றியில் துப்பாக்கியை வைத்து சுட்டான். இதன் காரணமாக சம்பவ இடத்திலேயே இவர்கள் உயிரை தியாகம் செய்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

இவர்கள் படைப்பின தேவையில் மிகவும் ஆர்வமுள்ளவர்கள் ஆவார்கள். யாராவது நோயுற்றிருப்பதை கேள்விப்பட்டால் உடனே அவர்கள் தொண்டு செய்வதற்காக சென்று விடுவார்கள். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்பவர்கள் ஆவார்கள். மிகவும் தூயவர்கள், மிகவும் கடின உழைப்பு செய்பவர்கள், எல்லாவித வேலையையும் செய்பவர்கள் எந்த வேலையைச் செய்வதற்கும் அவர்கள் கூச்சப்படமாட்டார்கள். விருந்தினர் உபசரிக்கும் பண்பு உடையவர்கள், பொறுமை மற்றும் பெருந்தன்மை உடையவர்கள், கோபமாக யாரையும் பேசியதில்லை, அமைதியான குணமுடையவர்கள் யாரையும் பகைத்ததில்லை. அங்கேயே அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டது. இரண்டு மகன்கள், இரண்டு மகள்களை விட்டு சென்றுள்ளார்கள். அல்லாஹ் இவர்களின் பதவிகளை உயர்த்துவானாக. மனைவி மக்களுக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக.

இன்னொருவரும் வஃபாத்தாகியுள்ளார்கள். ராணா முஹம்மது கான் சாஹிப் அட்வகேட் பாவல்நகரைச் சேர்ந்தவர்கள். ஜனவரி 21 ஆம் தேதி வஃபாத்தானார்கள். இந்த மாவட்டத்தின் அமீராக இவர்கள் பல வருடங்களாக விளங்கினார்கள். ஃபஸ்லே உமர் Foundation director -ம் ஆவார்கள். பல ஜமாஅத் கமிட்டிகளில் உறுப்பினராக சேவை செய்துள்ளார்கள். மிகவும் தூய நல்லியல்பு கொண்டவர், கிலாஃபத்தோடு விசுவாசமான தொடர்புடையவர்கள் ஆவர். அல்லாஹ் இவர்களின் பதவிகளை உயர்த்துவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 23.01.2009**

Translated by : **Maulavi S. ABDUL QADIR Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**